

அருணாசலம்
பிக்சர்ஸ்
கைதியின் காதலி

அருணாசலம் பிக்சர்ஸ் அளிக்கும்

# கைதியின் காதலி

A. ABDUL GAFFOOR MARKET ADIRAMPATTINAM.

**நடிகர்கள்:**

எஸ். எஸ். ராஜேந்திரன் ... ஓ. ஏ. கே. தேவர்
எஸ். ஏ. அசோகன் ... டி. வி. நாராயணசாமி
பி. எஸ். தட்சணாமூர்த்தி ... பக்கிரிசாமி
பி. எஸ். வீராச்சாமி ... சீதாராமன்

**நடிகைகள்:**

விஜயகுமாரி ... எல். விஜயலக்ஷ்மி
கே. என். கமலம் ...

கதை, வசனம்: ஏ. கே. வேலன்
பாடல்கள்: கண்ணதாசன், மருதகாசி
தஞ்சை ராமையாதாஸ்
இசை: கே. வி. மகாதேவன்
பின்னணி பாடியவர்கள்:
சௌந்தரராஜன், ஏ. எல். ராகவன், சுசிலா,
எம். எஸ். ராஜேஸ்வரி, டி. எஸ். ராஜேஸ்வரி,
சூலமங்கலம் ராஜலட்சுமி
நடன அமைப்பு: பி. எஸ். கோபாலகிருஷ்ணன்
ஒளிப்பதிவு: வி. ராமமூர்த்தி
ஒலிப்பதிவு: பாடல்கள்: ஈ. ஐ. ஜீவா
வசனம் ஒலிப்பதிவு: கே. என். சண்முகம்
மின்சாரம்: என். லோகநாதன்
கலை: கே. பி. முத்து
ஒப்பனை: டி. டி. சுந்தரம்
உடை: பி. எஸ். மாணிக்கம்
நிர்வாகம்: எஸ். காமாட்சி-என். கே. மணி
ஏற்பாடுகள்: என். கோவிந்தராஜி
புராசசிங்: ஏ. வி. எம். லாபரட்டரி
விளம்பரம்: ஜி. வெங்கட்டராமன்
புகைப்படம்: திருச்சி கே. அருணாசலம்
எடிட்டர்: வி. பி. நடராஜன்
தயாரிப்பு-டைரக்ஷன்: ஏ. கே. வேலன்
ஸ்டுடியோ: அருணாசலம்

கலைமகள் மதுரை.

## கதைச்சுருக்கம்

வறுமைக் கடலிலே வாழ்க்கைப் படகை திசை தெரியாமல் செலுத்திக்கொண்டிருந்த ஏழைக் குடியானவன் "அழகிரி" காலத்தின் சூழ்நிலை அவனைத் திருடனாக்கி சிறைக்கனுப்பியது. தாய் இறந்தாள். தங்கை திக்கற்றவளானாள். முடிவில் தங்கை சாவின் தலைவாசலுக்கு வந்தாள். ஒரு "ஆள்விழுங்கி" அவளை அதனினும் கொடிய முடிவுக்கு ஆளாக்கினான். தங்கையின் நல்லகாலம் ஓர் ரகசிய போலீஸ் அதிகாரியே அவளை வாழ்க்கைத் துணைவியும் ஆக்கிக்கொண்டார்.

விடுதலை அடைந்த "அழகிரி" தாயையும் தங்கையையும் காணமுடியாத நிலையில் கசப்படைந்து கள்ளனாகவும் மாறத் துணிந்தான். ஒரு நல்லவர் அவனை வாழவைத்து அவனைத் திருத்தி விட்டார். ஒரு பெரிய பண்ணை பணியாளனாக அமர்ந்தான் அழகிரி. அங்குள்ள தொழிலாளர்கட்கெல்லாம் தலைவனாகவும் ஒரு தோழிக்கு தோழனாகவும் ஆனான். ஆனால்...அந்தக் காதலுக்குப் பண்ணை எஜமானனின் எதிர்ப்பு சூழ்ச்சி எல்லாம் சேர்ந்து இருவரையும் பிரித்தது.

அவளைத் தேடினான்...

அவளாகவே ஒருத்தி தெரிந்தாள்......

ஆள் மாறாட்டம்.........

முடிவில் இரு பெண்களும் இரட்டைப்பிறவி என்பது தெரிந்தது...ஆனால் அழகிரிதேடிப்போன காதலி எங்கே?

வெள்ளித்திரை விளக்கும்

# கைதியின் காதலி பாடல்கள்

## 1

இயற்: தஞ்சை ராமையாதாஸ்  பாடி: எம். எஸ். ராஜேஸ்வரி

உதய சூரியன் வளர்ந்து வந்தான்
உலகம் உய்யவே
உள்ளம் மகிழவே—மாந்தர்
உள்ளம் மகிழவே
இதயவானில் எழில் உலாவ
இயங்கிடும் தாரா—போலே
இணையிலாத அழகு தாமரை
எழுந்ததே பாராய் (உதய)

கன்னித் தமிழ்மகள் கண்ட நாடு
கண்ணகியின் வீடு
கவரிமான் போல மானம் காக்கும்
காவியத்தின் ஏடு (உதய)

புவனமேவும் குறைகள் யாவும்
பொறுத்திடும் பூமாதா—போலே
பொறுமையோடு உலகில் வாழ
பிறந்த கோமாதா [உதய

## 2

இயற்: அ. மருதகாசி  பாடி: சுசிலா

ராஜாவும் வந்திடுவார்
ரோஜாப்பூ தந்திடுவேன்—அதை
ஆசையாக முடிப்பாரென் சடையிலே
அன்னத்தையும் காணுவார் என் நடையிலே (ராஜா)

வாசமுள்ள பூவைச்சுத்தும் வண்டுபோலே—அவர்
வந்திடுவார் என்னைச்சுத்தி அன்பினாலே
நேசமொழி பேசிடுவார் தேனைப்போலே—அவர்
நெருங்கி வந்தால் ஒதுங்கிடுவேன் மானைப்போலே (ராஜா)
ஆகாய வீதி எங்கள் பாதையாகும்

ஆலமர விழுது எங்கள் ஊஞ்சலாகும்
ஏகாந்தம் எங்களுக்கு சொர்க்கமாகும்
இன்பமெல்லாம் எங்களுக்கே சொந்தமாகும் (ராஜா)

பாட்டு 3

இயற்றி: அமரகவி பாரதியார் பாடியவர்: பி. சுசிலா

தாயே......
நின்னைச் சில வரங்கள் கேட்பேன்—அவை
நேரே இன்றைக்குத் தருவாய் தாயே
என்னைப் புதிய உயிராக்கி தாயே...
எனக்கு ஏதும் கவலை பறச்செய்து—மதி
தன்னை மிகத் தெளிவு செய்து என்றும்
சந்தோஷம் கொண்டிருக்கச் செய்வாய் தாயே—
எண்ணும் காரியங் களெல்லாம் வெற்றி
ஏற புரிந்தருளல் வேண்டும்
தொழில் பண்ணப் பெருநிதியம் வேண்டும்
அதற்கு பல்லோர் துணைபுரிதல் வேண்டும்

பாட்டு 4

இயற்: கண்ணதாசன் பாடி: ராகவன்-சூலமங்கலம் ராஜலட்சுமி

ஆண்: சித்திரப் பூங்கொடி தென்றலை மறந்து
சிந்தித்திருப்பதும் சரியோ—கொடி
சிந்தித்திருப்பதும் சரியோ—இங்கு
வந்ததும் தென்றல் இலையோ?

பெண்: சிந்தனை த தென்றலில் புயல் விளைந்தது
சித்திரக் கொடியின் மேலே—இளம்
சித்திரக் கொடியின் மேலே—அது
முற்றியதே இந்நாளே

ஆண்: ஆடிக் களிக்கின்ற ஓவிய மாமயில்
ஆட மறந்ததைக் கண்டு—முகில்
வாடி வதங்குது இங்கு

பெண்: கூட்டுச் சிறையினில் பூட்டிவிட்டே தினம்
ஆட்டிப் படைப்பதனாலே—மயில்
ஆட்டம் மறந்ததிந்நாளே

ஆண்: பாடிக் குவிக்கின்ற பத்தினிப் பூங்குயில்
பாட மறந்ததும் ஏனோ—தனிப்

பாதையில் நிற்பதும் ஏனோ?
பெண்: பாடும்-டி ஒரு ஆணையிட்டால் குயில்
பாட்டுப் படிப்பதும் உண்டோ—பிறர்
கேட்டு மகிழ்வதும் நன்றோ
ஆண்: என்ன தயமொன்று சொல்லாதே—அது
என்னிடம் சொன்னால் மாறுதோ
பெண்: சொல்லி மறந்திடக்கூடுவதோ—இது
சொல்லில் அடங்கிய வேதனையோ
ஆண்: தொட்டு மணந்தவன துணையில்லையோ
துன்பத்தில் பங்கில்லையோ
பெண்: இன்பத்தில் பாதி துன்பத்தில் பாதி
ஆண்: ஒன்றினுக்கொன்று ஆதாரம்
பெண்; மன ஒற்றுமைகொள்வது சம்சாரம்
இருவ: அன்றிலும் பேடையும் ஒன்றிய
ஆண்: ஒன்றினுக் கொனறு ஆதாரம்
பெண்: மன ஒற்றுமை கொள்வது சம்சாரம்
இருவ: அன்றிலும் பேடையும் ஒன்றிய காதல்
மண்ணில் சுகம் பெறுவோமே மனம்
ஒன்றி மணம் பெறுவோமே

பாட்டு 5

இயற்: அ. மருதகாசி பாடி: டி. எம். சௌந்தராஜன்
வந்து வந்து ஒவ்வொண்ணாப் போகுதே-நீ
வராததால் எம்மனசு வேகுதே [வந்து]
தங்கமுலாம் பூசுகிற மஞ்சள் வெய்யிலும்
தத்திமி என்றாடுகிற நீல மயிலும்
பெண்கிளியும் ஆண்கிளியும் கொஞ்சுகிற சோலை
பேச்சுத் துணையில்லாமலே நான் தவிக்கும் வேளையிலே
சலசலன்னு அருவியோசை கேட்குது—ஆனா
கலகலன்னு வளையலோசை கேக்கலே
சிலுசிலுன்னு மேலே-டுது தென்னலே சின்னப்
பொண்ணு நீயும் தொடுவதுபோல் அது இல்லே (வந்து
தென்னம்பாளை சிரிக்குது உன் சிரிப்பைப்போல இல்லே
கொன்னை பூத்துக்குலுங்குது உன்முகத்தைப்போலே இல்லே
அன்னம் நடைபழகுது உன் நடையைப்போல இல்லே
சன்னக்கொடி அசையுது உன் இடையைப்போல இல்லே

குமுகுமுன்னு வாசம் வந்து பூவிலே—ஆனா
குமரி உனது கூந்தல்வாசம் அதுக்கில்லே
கொஞ்சிக் கொஞ்சிக்கூவுதப் மா குயில்களே—உன்
குரலினிமை அலைகளுக்கும் அமையலே [வந்து]

பாட்டு 6

இயற்: அ. மருதகாசி பாடி: சௌந்தரராஜன்-சுசிலா

ஆண்: மார்கழி போச்சு தைபொறந்தாச்சு
மண்ணும் பொன்னாச்சு—எல்லாமே
மனம்போலே ஆகும் இனிமேலே

பெண்: மார்கழி போச்சு தை பொறந்தாச்சு
மண்ணும் பொன்னாச்சு எல்லாமே
மனம்போலே ஆகும் இனிமேலே

ஆண்: வருங்காலம் நற்காலம்
வாழ்ந்திடச் செய்யும் பொற்காலம்
வரவேற்றுக் கன்னியின் உள்ளம்
வழங்கும் அதுக்குத் தாம்பூலம்

பெண்: பலபேரும் பார்த்திடவே
பரிகாசம் செய்திடவே
மலர்மாலை சூடும் காட்சி
வாலிபர் கனவில் உருவாகும் [மார்கழி]

ஆண்: வளர்ந்தாயே முத்தாக
பிறர்வீட்டின் சொத்தாக
வரப்போறாய் என்னைத்தேடி
வாழ்வில் அன்பின் சத்தாக

பெண்: இருந்தேனே தனியாக கொய்யாத கனியாக
விருந்தானேன் அத்தான் உனது
எண்ணம் எல்லாம் இனிப்பாக [மார்கழி]

7

இயற்: மருதகாசி பாடி: ராஜேஸ்வரி

சிங்கார மல்லிகை மருவு...அந்தி
மந்தாரை சாமந்திப்பூப்பு
விலை லிவு
புருஷன் மனசை வசியமாக்கி
போதையுண்டாக்க செண்பகம்

பருவப் பெண்கள் எல்லோரும் விரும்பும்
பவழமல்லி கதம்பம் விலை மலிவு (சிங்கார)

கொண்டை மீது சரம் குலுங்கும்போது—மணம்
அண்டை வீட்டில் கமகமக்கும் அது அழைக்கும்
வண்டுபோல அதைக் கண்டபேரில் மனம்
இன்பம் கொண்டு துடிதுடிக்கும் கிறுகிறுக்கும்
விலை மலிவு (சிங்கார)

கதிர்பச்சை வெட்டிவேரு
கன்னிப் பெண்ணே வச்சுப்பாரு
காதலன் தன்னாலே வருவான்—உன்னைக்
கட்டாயம் கல்யாணம் முடிப்பான்
மயக்கமூட்டும் மரிக்கொழுந்து
இருக்குது உனக்கு வேணுமா?
இளிக்க வேணும் காசில்லாமே
இதுவும் சும்மா வருமா? விலை மலிவு (சிங்கார)

வணக்கம்